செய்தி வெளியீடு எண்: 831 நாள்: 25.11.2019

**இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்குநரகம், சென்னை–106**
**சிறுபான்மையினர் சுயநிதி ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள எம்.டி. ( ஹோமியோபதி ) ( மூன்றாமாண்டு பட்ட மேற்படிப்பு கல்வி ) இருக்கைகளுக்கு**

இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் ASU&H பட்ட மேற்படிப்பு சேர்க்கைக்கான கடைசி தேதியை **30.11.2019** வரை நீட்டித்துள்ளது. மேலும் சேர்க்கைக்கான குறைந்த பட்ச தகுதியாக அகில இந்திய ஆயுஷ் பட்ட மேற்படிப்பு தகுதித் தேர்வில் ( AIAPGET 2019 ) தேர்ச்சிக்கான மதிப்பெண்களை **40** வது சதவீத விகிதமாக ( 40th Percentile ) பெற்றிருக்க வேண்டும் என பொது பிரிவினருக்கு நிர்ணயித்துள்ளது. இருப்பினும் பழங்குடியினர் / அருந்ததியர் / பட்டியல் இனத்தவர் / மிகவும் பிற்படுத்தப் பட்டோர் / சீர் மரபினர், இதர பிற்படுத்தப்பட்டோருக்கான தகுதி மதிப்பெண்கள் **30** வது சதவீத விகிதமாக ( 30th Percentile ) குறைக்கப்பட்டு உள்ளது. மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டப்படி உடற்குறைபாடுள்ள மாணவர்களுக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் பொதுப் பிரிவினருக்கு **35** வது சதவீத விகிதமாகவும் மற்றைய பழங்குடியினர், அருந்ததியர், பட்டியல் இனத்தவர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் / சீர் மரபினர், இதர பிற்படுத்தப்பட்டோருக்கான குறைந்தபட்ச மதிப்பெண் விகிதம் **30** வது சதவீத விகிதமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மேற்கூறப்பட்ட புதிய தகுதி காரணியின் அடிப்படையில் **27.11.2019** அன்று காலியாக உள்ள அரசு ஒதுக்கீடு இடங்களுக்கும் மற்றும் நிர்வாக காலி இடங்களுக்குமான உடனடிக் கலந்தாய்வு தனித்தனியே மற்றும் அடுத்தடுத்து தொடர்ச்சியாகவும் நடைபெற உள்ளது. கலந்தாய்வு நாளன்று இரு பிரிவிற்குமான புதிய விண்ணப்பப் படிவம் **27.11.2019** அன்று ( கண்டிப்பாக காலை **8.00** மணி முதல் நண்பகல் **12.00** மணிக்குள் மட்டுமே ) தேர்வுக் குழு அலுவலகத்தில் வழங்கப்படும். அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.**3000/–** மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.**5000/–** ஆகும். விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்த பின் சுமார் **2** மணியளவில் அன்றைய தினமே அரசு ஒதுக்கீடு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டிற்கான பொது தகுதிப் பட்டியல் உடனடிக் கலந்தாய்வு நடைபெறும். தேர்வுக்குழு அலுவலகத்தில் தனித்தனியே வெளியிடப்படும். **2019–20** கல்வி ஆண்டிற்கான எம்.டி. ஹோமியோபதி கையேட்டில் குறிப்பிடப் பட்டுள்ள அனைத்து பொருந்தும் விதிகளும் / பிரிவுகளும் ( அரசு மற்றும் நிர்வாக இடங்களுக்கான தனித்தனி கையேட்டில் உள்ளபடி ) உடனடிக் கலந்தாய்வில் கலந்து கொள்ளும் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பொருந்தும். குறைந்தபட்ச மதிப்பெண் பெற்ற காரணத்தால் சென்ற கலந்தாய்வில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட மாணவர்களும் இக்கலந்தாய்வில் கலந்து கொள்ள மீண்டும் புதிதாக விண்ணப்பிக்கலாம். உடனடிக் கலந்தாய்வில் கலந்து கொள்ளும் அனைத்து விண்ணப்பதாரர்களிடமும் ரூ.**1000./** கலந்தாய்வுக் கட்டணமாக பெறப்படும். அரசு இடங்களுக்கான கலந்தாய்வில் இட ஒதுக்கீடு ஆணை பெறும் மாணவர்கள் பகுதி கல்விக் கட்டணமாக ரூ.**10,000/–** செலுத்த வேண்டும் மற்றும் நிர்வாக இடங்களுக்கான கலந்தாய்வில் இடஒதுக்கீடு ஆணை பெறும் மாணவர்கள் பகுதி

கல்விக் கட்டணமாக ரூ.25,000./ செலுத்த வேண்டும். விண்ணப்பக் கட்டணம், கலந்தாய்வுக் கட்டணம் மற்றும் பகுதி கல்விக் கட்டணம் அனைத்தும் வரைவோலையாக சென்னையில் மாற்றத் தக்க வகையில் “**இயக்குநர் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை**” என்ற பெயரில் 25.11.2019 அன்றோ அதற்கு பின்போ எடுக்கப் பட்டு செலுத்தப்பட வேண்டும்.

| **எம்.டி. ( ஹோமியோபதி ) அரசு ஒதுக்கீடு ( ம ) நிர்வாக ஒதுக்கீட்டிற்கான காலியிடங்களுக்காக உடனடி கலந்தாய்வு 27.11.2019 அன்று பிற்பகல் இரண்டு மணி அளவில் முறையே அடுத்தடுத்து / தொடர்ந்து நடைபெற உள்ளது. மேற்கண்ட உடனடி கலந்தாய்விற்கான காலியிடங்கள் – துறைவாரியாக / வகைவாரியாக 20.11.2019 அன்று மாலை 5.00 மணி அளவில்.** | | | | | |
|---|---|---|---|---|---|
| பட்ட மேற்படிப்பு துறை | சாரதா கிருஷ்ணா ஹோமியோபதி மருத்துவ கல்லூரி குலசேகரம், கன்னியாகுமரி மாவட்டம் ( மொழி சிறுபான்மையினர் கல்லூரி ) | | | ஒயிட் மெமோரியல் ஹோமியோபதி மருத்துவ கல்லூரி ஆத்தூர், கன்னியாகுமரி மாவட்டம். ( மத சிறுபான்மையினர் கல்லூரி ) | |
| | அரசு ஒதுக்கீடு காலி இடங்கள் | நிர்வாக ஒதுக்கீடு காலி இடங்கள் | | அரசு ஒதுக்கீடு காலி இடங்கள் | நிர்வாக ஒதுக்கீடு காலி இடங்கள் |
| Organon of Medicine | – | 2 | | 2 | 2 |
| Materia Medica | – | – | | – | 2 |
| Practice of Medicine | – | 1 | | 1 | 2 |
| Paediatrics | – | – | | 1 | 2 |
| Repertory | – | 1 | | – | 2 |
| மொத்தம் ( வகை வாரியாக ) | – | **4** | | **4** | **10** |

மேலும் விவரங்களுக்கு எங்கள் நிர்வாக வலைதளமான www.tnhealth.org-ஐ தயவு செய்து பார்க்கவும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**